**<u>தொழிலற்ற பட்டதாரிகளை தொழில்களில் உள்ளீர்ப்புச் செய்வதற்கான வேலைத்திட்டம் - 2020</u>**

மேற்குறிப்பிட்ட வேலைத்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது பட்டப் படிப்பு அல்லது அதற்குச் சமமான தகுதி ஒன்றெனை பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா பாடநெறி ஒன்றினை 2019.12.31 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவுசெய்துள்ள தொழிலற்ற இளைஞர் யுவதிகளுக்காக மேற்கொள்ளவிருக்கும் பயிலுனர் பயிற்சி வேலைத்திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல் மாவட்ட மட்டத்தில் இத்துடன் வெளியிடப்படுகின்றது.

பயிலுனர் பயிற்சிகளுக்காக இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்டதாக இதுவரை கடிதங்கள் கிடைக்கப்பெறாத, இணையத்தளத்தில் பெயர் காணப்படும் விண்ணப்பதாரிகளுக்கான கடிதங்கள் எதிர்வரும் காலங்களில் கிடைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

கவனத்திற் கொள்ள வேண்டியது:

01. பயிற்சிபெறுபவரின் தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவிடத்தினை உறுதி செய்யும் சான்றிதழ், விபரங்கள் அடங்கிய பெறுபேற்று அட்டவணை, (பட்டப்படிப்பிற்கான சான்றிதழோ அல்லது விபரங்கள் அடங்கிய பெறுபேற்று அட்டவணையோ குறித்த பல்கலைக் கழகத்தினால் இதுவரை வழங்கப்படாதிருப்பின் குறித்த பல்கலைக்கழகத்தின் பதிவாளரினால் வழங்கப்பட்ட கடிதம்) தகுதி பெற்ற டிப்ளோமாதாரி அல்லது அரசாங்க பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி அல்லாதவிடத்து உயர் கல்வி அமைச்சு / பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விண்ணப்பதாரியின் பெயருக்கு வழங்கப்பட்ட கடிதம் மற்றும் பெயரில் மாற்றம் காணப்படின் அதற்கான சத்தியக் கடதாசி, துறவறத்திலிருந்து நீங்கியமைக்கான சான்றிதழ் உள்ளிட்ட ஏனைய சான்றிதழ்கள் அனைத்தும் ஒரு மாத காலத்திற்குள் குறித்த பிரதேச செயலாளரினால் நியமிக்கப்படும் தினத்திற்கு பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

02. பயிற்சிக்கு உட்படுவதற்காக விண்ணப்பதாரி ஒருவர் பொய்யான தகவல்கள் அல்லது தவறான கடிதங்களைச் சமர்ப்பித்திருப்பதாக பயிற்சிக் காலத்தின் எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது தெரியவருமிடத்து அல்லது கணினிமயப்படுத்தலின்போது ஏற்பட்ட தவறினால் நியமனம் வழங்கப்பட்டிருப்பின் உடனடியாக செயற்படும் வகையில் பயிற்சிபெறுபவரின் பயிற்சியானது உடனடியாக நிறுத்தப்படும். பயிற்சிக்கு உட்படுவதற்கான அடிப்படை தகுதிகளுக்காக பொய்யான அல்லது தவறான சான்றிதழ்களைச் சமர்ப்பித்திருக்கும் பட்சத்தில் பயிற்சிபெறுபவரின் நியமனத் திகதியிலிருந்து பயிற்சியினை இடைநிறுத்தும் காலம் வரை பயிற்சியாளருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் அவருக்கு அரசினால் அதுவரை மேற்கொள்ளப்பட்ட சகல செலவுகளையும் மீள அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஒப்பம்/. எஸ். ஹெட்டிஆராச்சி
செயலாளர்
பொது நிர்வாக, உள்ளாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் அமைச்சு